THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, the 1st March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : நான் உங்கள் எல்லோரையும் இந்த சட்டசபை கூட்டத்திற்கு வரவேற்கிறேன்.

I.—OBITUARY REFERENCE TO THE DEATH OF MAULANA ABUL KALAM AZAD.

MR. SPEAKER : மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சராயிருந்த மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் பெப்ருவரி 22-ம் தேதியன்று மரணம் அடைந்த செய்தியை நான் வருத்தத்தோடு இந்த சபைக்கு தெரிவிக்கிறேன். அவர் தேசத் தொண்டர். தேச விடுதலைப் போராட்டத்தில் மஹாத்மா காந்தியோடு தோளோடு தோள் நின்று வேலை செய்தவர். உருதுவில் நல்ல பேரறிஞர். கல்வியமைச்சராய் நம் நாட்டிற்கு நல்ல பணி செய்தவர். நாம் அவரது மரணத்தால் அடைந்துள்ள பெரும் நஷ்டத்தை, நமது ஆழ்ந்த அனுதாபத்தை இச்சபையின் சார்பாக அன்னாரின் குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் எல்லோரும் இரண்டு நிமிஷம் மௌனமாய் நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சபை இப்பொழுது கலைந்து மறுபடியும் 11-30-க்கு கூடும்.

The House adjourned and re-assembled at 11-30 a.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Local Development Scheme at Arumbakkam

* 153 Q.—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any school has been constructed under the Local Development Scheme at Arumbakkam, Tiruvannamalai taluk;

(*b*) if so, when it was constructed; and

(*c*) why it has not been recognised?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) , (*b*) & (*c*) The building was built under the National Extension Service scheme and not the Local Development Scheme. I do not have the exact date, etc., Sir.

SRI P. U. SHANMUGAM : இந்த பாடசாலைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ? அளிக்கப்படவில்லையென்றால் எப்போது அளிக்கப் படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி டைரக்டர் ஆப்-பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்-னுக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பதில் வந்த பின்னால் உத்தரவு போடப்படும்.